இந்துமதம் என்பது முன்னோர் வழிபாடு ; மூத்தோர் வழி நடத்தல்
அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வே

அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே

ஆதாரம் : மூலப்பதினெண் சித்தர் பீடாதிபதி ஆதி சிவனாரின் குருபாரம்பரியம்


தலைமைபீட முகவரி:

**பதினெண் சித்தர்மடம்**

*தலைமைபீடம்,*

5, இராசுமுதலி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர்,
சென்னை – 600 053 தொலைபேசி: 044 – 6244447







காவேரியாற்றங்கரை
கருவூறார்




அரசயோகி கருவூறார்



கோசலையாற்றங்கரை கருவூறார்







சூரியநாத கருவூறார்

முன்னுரை

ஓம் குருவே எல்லாம்

மெய்யன்பர்களே !

அருளாட்சி நாயகி என்றும் மங்கையர்கரசி என்றும் மதுரைக்கு அரசி என்றும், சித்தர்களாலும், ஞானிகளிலும், மகான்களாலும், புலவர் பெருமக்களாலும் போற்றப்படுகின்ற மதுரை மீனாட்சி அம்மனுடைய அருள் வேட்டலையும், வரலாறையும், காயந்திரிகளையும், சிறு நூல் வடிவிலே வெளியிட முனைந்திருக்கும், பதினெண் சித்தர் மடத்தின் முயற்சி பாராட்டுக்குரியது.

கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே முன்தோன்றிய அருளுலக ஆட்சி மொழியான அண்டபேரண்டம் ஆளும் அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழிக்கு உரியவர்களான தமிழர்களுக்கு இந்த வெளியீடு ஒரு வரப்பிரசாதமாகும். இனஉணர்வு, மொழிஉணர்வு, பண்பாட்டு நாகரீக பெருமை உணர்வு, வேத உணர்வு, மத உணர்வின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினம், இந்நூலை பயன்படுத்துவதன் மூலம் தங்களது இனமானம் காக்க, மொழிமானம் காக்க, முன்வருவார்கள் என்ற நம்பிக்கைப் பிறக்கிறது. இந்நூலில் வருகின்ற மீனாட்சி அம்மன் காயந்திரிகள் பல லட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் எழுத்தப்பட்டவைகளாக இருந்தாலும் மீனாட்சி அம்மன் அருள்வேட்டல், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், மதுரையின் அழிவை அடுத்து, தமிழின, விழிச்சிக்காக, எழுச்சிக்காக, செழிச்சிக்காக பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியான குருமகா சன்னிதானம் பேரருள்மிகு தாத்தா ஞாலகுருசித்தர் அமராவதி ஆற்றங்கரை கருவூறார் அவர்களால் வழங்கப்பட்ட ஒன்றாகும்.



சுமார் கால் நூற்றாண்டு காலம், தமிழின, மொழி, மத, விடுதலைக்காக வாழ்ந்து, எண்ணற்ற அருளாளர்களை உருவாக்கி, சமயபணியையும், சமுதாய பணிகளையும், ஆற்றிடச்செய்து விட்டு, இன்று சென்னை – செங்குன்றம் – காரனோடையில் சமாது நிலையில் கொலுவீற்றிருக்கும் எங்களது 12வது ஞானாச்சாரியார் ஞாலகுருசித்தர் அரசயோகி கருவூறார் அவர்கள் எண்ணற்ற காயந்திரிகளையும், வரலாறுகளையும் வெளியிட்டு இருந்தாலும் அனைத்துக்கும் முத்து வைத்தாற்போல இந்த மீனாட்சி அம்மன் அருள் வேட்டலும், வரலாறும் அமைந்து இருக்கின்றன. இந்த அருள்வேட்டலை படிக்கப்படிக்க தமிழினத்தின் ஒற்றுமைக்கு உயிர் ஊட்ட வேண்டுமென்றால் அது சித்தர் நெறியான சீவ நெறியான இந்து வேதமான இந்து மதத்தால்தான் முடியும், என்பது உறுதியாகிறது. இனிமேலாவது, தமிழனினம் தனது ஒற்றுமையை நிலைநிறுத்த தனது வரலாற்றை தெரிந்து கொள்ள சித்தர் நெறியை பின்பற்றவேண்டும். இந்நூலை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆத்தாள் தேவி மீனாட்சியை சித்தி செய்ய விருப்புகிறவர்கள், இதில் வருகின்ற காயந்திரிகளை முழுமையாக முறைகாக ஒத வேண்டும். இந் நூல் வெளிவர ஒப்புதல் வழங்கிய இன்றைய குருபீடங்கள் பேரருள்மிகு சித்தர் கோசலையாற்றங்கரை கருவூறார் அவர்களுக்கும், பேரருள்மிகு சூரியநாத கருவூறார் அவர்களுக்கும் எங்களது நன்றி கலந்து வணக்கங்களை காணிக்கையாக்குகிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம்

இவண்

சித்தரடியார்கள் தென்மண்டலம்.

உ
ஓம் குருவே எல்லாம் . . .

## இது கோயிலல்ல ஆலயம்

# மீனாட்சி அம்மன் ஆலயவரலாறு

இன்றைக்கு பல கோபுரங்களோடு விரிந்து பரந்து கிடக்கின்ற ஆலவாய் மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம் தோன்றி வளர்ந்த வரலாறு இன்றோடு 43,73,101 ஆண்டுகள் (இந்து மத ஆண்டு 43,73,101 ஆண்டுகள்) எனவே மெய்யான இந்து மதமெனும் மரத்திற்கு இன்றுள்ள ஆணிவேர் போன்ற மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடுகிறோம். மூலச்சத்தி பீட மூன்று கோயில்களுள் ஒன்றே இன்றுள்ள ஆலவாய் மதுரை மாமூதூர்தேவி ***மீனாட்சியம்மன் ஆலயம் இது கோயிலல்ல.***



ஏனெனில் நாடோடிப்பாடல் எனப்படும் சித்தர்களின் பாடல்களில் -

ஆலயம் கோயிலாச்சுதடி குதம்பாய்
கோயில் ஆலயமாச்சுதடி குதம்பாய்
மயில் குயிலாகக் கூவுதடி குதம்பாய்
குயில் மயிலாக ஆடுதடி குதம்பாய்
கோலமிட்டென்ன ஓலமிட்டென்ன குதம்பாய்
ஆலவட்டம் போடுதடி அனைத்தும் குதம்பாய்
அறிவதேது புரிவதேது இனிமேல் . . . .

என்ற புலம்பல் காணப்படுகிறது.

பதினெண் சித்தர்கள் குறிக்கின்ற மீதிக்காலம், பாதிக்காலம், ஆதிக்காலம், அனாதிக்காலம் என்கின்ற நான்கு காலங்களிலுமே இன்றுள்ள மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம்

இருந்திருக்கிறது. இது விந்திய மலைக்கு வடக்கேயுள்ள மண்ணுலக மலைகளின் அரசாக விளங்குகின்ற இமயமலை தோன்றுவதற்கு முன்பிருந்தே, மெய்யான இந்து மதத்தின் அருளாட்சிக்கு தலைமைபீட ஆலயமாக இருந்து வருகின்றது. இம்மண்ணுலகில் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டமெனும் குமரிக்கண்டத்தின் மூன்று எல்லை மையங்களில் ஆலவாய், மாமூதூர், மதுரை, யெனும் நகரங்கள் படைக்கப்பட்டு அதில் மீனாட்சியம்மன் எனப்படும் சத்தி பீடங்கள் அமைக்கப்பட்டே அருளாட்சி துவக்கப்பட்டது. அப்படித்துவக்கப்பட்ட மூன்று சத்தி பீடங்களுள் ஒன்றுதான் இன்றுள்ள வைகையாற்றங்கரை ஆலவாய் மாமூதூர் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம்.



மெய்யான இந்துமத வரலாற்றுப்படி தொன்மதுரை, தென்மதுரை, மதுரை, வட மதுரை, மானாமதுரை . . . என்று ஐந்து மதுரைகள் குறிக்கப்படுகின்றன.

இவற்றுள் பஃறுளியாற்றங்கரையிலிருந்த தொன்மதுரையும்; குமரியாற்றங்கரையிலுள்ள தென்மதுரையும்; வைகையாற்றங்கரை யிலுள்ள மதுரையும்தான் மீனாட்சியம்மன் ஆலயம் என்ற ஒன்றினைப் பெற்றிருக்கின்றன. மேலும் இம்மூன்று நகர்கள் மட்டும்தான் திருநகர், மாமூதூர், ஆலவாய் . . . என்ற சிறப்புப்பெயர்களை பெற்றிருக்கின்றன.

இந்த மூன்று நகரங்களும் மூன்று எல்லைகளாகக் கொண்டு ஒரு முக்கோண△வடிவ சத்திபீடம் இளமுறியாக் கண்டமெனும் குமரிக்கண்டத்தில் அருளாட்சிக்காக உருவாக்கப்பட்டது.

அதாவது சுமார் இன்றைய விந்திய மலையிலிருந்து தெற்கே ஏழாயிரம் (7000) கல்தொலைவு நீளமும் நாலாயிரம் (4000) கல் தொலைவு அகலமுள்ள மிகப்பெரிய நிலப்பரப்பாக இருந்திருக்கின்றது, இளமுறியாக்கண்டம்.

இந்தக்கண்டமே இம்மண்ணுலகில் நீருக்குள்ளிலிருந்து வெளிப்பட்ட முதல் பெரும் நிலப்பரப்பாகும். இன்றைக்கு இந்துமாக்கடல் என்றுள்ள தண்ணீர்ப் பரப்பு அனைத்துமே ஒரு காலத்தில் இன்றைய தென்னிந்தியாவோடு சேர்ந்து ஒரு மிகப்பெரிய நிலப்பரப்பாக இருந்திருக்கின்றது. இது படிப்படியாக முதல் கடல்கோலில் தென்மதுரையோடு கடலுக்குள் மூழ்கிவிட்டது. அந்தக் குமரிக்கண்டத்தின் எஞ்சியப் பகுதிகளில் மிகப்பெரிய பகுதியாக இருப்பதுதான் தென்னிந்தியா என்று சொல்லப்படும், விந்தியமலை முதல் குமரிமுனை வரையுள்ள நிலப்பகுதி. எனவே இம்மண்ணுலகின் ***முதல் மதமான பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் மூலச்சத்தி சித்தர்களின் மெய்யான இந்து மதத்தின் மூலச்சத்தி பீட மூன்று கோயில்களுள் ஒன்றே இன்றுள்ள ஆலவாய் மதுரை மாமூதூர் தேவி மீனாட்சி அம்மன் ஆலயம் இது கோயிலல்ல.***



*ஓம் குரு வாழ்க! ஓம் குருவே துணை ஓம் குருவே எல்லாம்!*

# அன்றாடம் ஓதவேண்டிய காயந்திரி மந்தரங்கள்

## *காயந்திரி மந்தரம்*

ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!
தத்துவ வித்துக்கள் அரணாகுக!
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!

## *சத்தி காயந்திரி மந்திரம்*

ஓம் சத்தியே காத்தாயி! அயனாய வித்தின் மகவே!
வாலையே! கன்னியே! குமரியே! நங்கையே! தீயென மலர்ந்திடு
தீயே உன்னோடு தூர்த்திடு பிறச்சினையாவும்
தாயே என்னோடு உயிரினப் பயிரினக் காப்புவழங்கிடு

ஓம்

## பதினெண் சித்தர் பீடம் ஞானாச்சாரியார் சித்தர் கருவூறார்களின் பூசா மொழி வாசகங்கள்

## மதுரை மாமுதூர் ஆலவாய்

# மீனாட்சியம்மன் அருள் வேட்டல்

1. ஓம் மீனாட்சியே, சொக்கியே, அங்கயற்கண்ணியே அருள்க!
2. மீனாட்சியே, சொக்கேசுவரியே,
   அங்கயற் கண்ணீசுவரியே அருள்க!
3. மீனாட்சியே, ஆலவாய் அழகியே,
   அங்கயற்கன்னியே அருள்க!
4. மீனாட்சியே, ஆலவாய் அழகீசுவரியே,
   அங்கயற்கன்னீசுவரியே அருள்க!
5. மீனாட்சியே உகஉகமாய் அருளாட்சிபுரிபவளே அருள்க!
6. மீனாட்சியே நான் மறைகளின் வடிவே முடிவே அருள்க!



7. மீனாட்சியே நான் முறைகளின் வடிவே முடிவே அருள்க!
8. மீனாட்சியே நானெறிகளின் வடிவே முடிவே அருள்க!
9. மீனாட்சியே நான்வேதங்களின் வடிவே முடிவே அருள்க!
10. மீனாட்சியே நவநாதங்களின் வடிவே முடிவே அருள்க!
11. மீனாட்சியே பதிணெண் சித்தங்களின்
    வடிவே முடிவே அருள்க!
12. மீனாட்சியே முப்பத்தாறு போதங்களின்
    வடிவே முடிவே அருள்க!
13. மீனாட்சியே தொன்னூற்றாறு ஓதங்களின்
    வடிவே முடிவே அருள்க!
14. மீனாட்சியே சாத்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
15. மீனாட்சியே சாத்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
16. மீனாட்சியே சாத்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
17. மீனாட்சியே சூத்தரங்களின் வடிவே முடிவே அருள்க!

18. மீனாட்சியே சூத்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
19. மீனாட்சியே சூத்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
20. மீனாட்சியே தோத்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
21. மீனாட்சியே தோத்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
22. மீனாட்சியே தோத்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
23. மீனாட்சியே நேத்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
24. மீனாட்சியே நேத்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
25. மீனாட்சியே நேத்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
26. மீனாட்சியே வேத்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
27. மீனாட்சியே வேத்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
28. மீனாட்சியே வேத்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
29. மீனாட்சியே ஆத்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
30. மீனாட்சியே அத்திரங்களின் வடிவே முடிவே அருள்க!



31. மீனாட்சியே அத்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
32. மீனாட்சியே சுருதிகளின் வடிவே முடிவே அருள்க!
33. மீனாட்சியே ஆரணங்களின் வடிவே முடிவே அருள்க!
34. மீனாட்சியே ஆகமங்களின் வடிவே முடிவே அருள்க!
35. மீனாட்சியே மீமாம்சைகளின் வடிவே முடிவே அருள்க!
36. மீனாட்சியே நேமங்களின் வடிவே முடிவே அருள்க!
37. மீனாட்சியே இணைநேமங்களின் வடிவே முடிவே அருள்க!
38. மீனாட்சியே துணைநேமங்களின் வடிவே முடிவே அருள்க!
39. மீனாட்சியே நியமங்களின் வடிவே முடிவே அருள்க!
40. மீனாட்சியே இணைநியமங்களின் வடிவே முடிவே அருள்க!
41. மீனாட்சியே துணைநியமங்களின் வடிவே முடிவே அருள்க!
42. மீனாட்சியே நிடதங்களின் வடிவே முடிவே அருள்க!
43. மீனாட்சியே இணைநிடதங்களின் வடிவே முடிவே அருள்க!

44. மீனாட்சியே துணைநிடதங்களின் வடிவே முடிவே அருள்க!
45. மீனாட்சியே நிட்டைகளின் வடிவே முடிவே அருள்க!
46. மீனாட்சியே இணைநிட்டைகளின் வடிவே முடிவே அருள்க!
47. மீனாட்சியே துணைநிட்டைகளின் வடிவே முடிவே அருள்க!
48. மீனாட்சியே நீதிகளின் வடிவே முடிவே அருள்க!
49. மீனாட்சியே இணைநீதிகளின் வடிவே முடிவே அருள்க!
50. மீனாட்சியே துணைநீதிகளின் வடிவே முடிவே அருள்க!
51. மீனாட்சியே மந்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
52. மீனாட்சியே மந்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
53. மீனாட்சியே மந்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
54. மீனாட்சியே மாந்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
55. மீனாட்சியே மாந்தரீகங்களின் வடிவே முடிவே அருள்க!
56. மீனாட்சியே தந்தரங்களின் வடிவே முடிவே அருள்க!



57. மீனாட்சியே தந்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
58. மீனாட்சியே தந்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
59. மீனாட்சியே தாந்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
60. மீனாட்சியே தாந்தரீகங்களின் வடிவே முடிவே அருள்க!
61. மீனாட்சியே எந்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
62. மீனாட்சியே எந்திரங்களின் வடிவே முடிவே அருள்க!
63. மீனாட்சியே எந்திறங்களின் வடிவே முடிவே அருள்க!
64. மீனாட்சியே ஏந்தரங்களின் வடிவே முடிவே அருள்க!
65. மீனாட்சியே ஏந்தரீகங்களின் வடிவே முடிவே அருள்க!
66. மீனாட்சியே ஓமச்சுடரின் வடிவே முடிவே அருள்க!
67. மீனாட்சியே ஓகச்சுடரின் வடிவே முடிவே அருள்க!
68. மீனாட்சியே யாகச்சுடரின் வடிவே முடிவே அருள்க!
69. மீனாட்சியே யக்ஞச்சுடரின் வடிவே முடிவே அருள்க!

70. மீனாட்சியே வேள்விச்சுடரின் வடிவே முடிவே அருள்க!
71. மீனாட்சியே இச்சாசத்தியின் வடிவே முடிவே அருள்க!
72. மீனாட்சியே கீறியாசத்தியின் வடிவே முடிவே அருள்க!
73. மீனாட்சியே ஞானசத்தியின் வடிவே முடிவே அருள்க!
74. மீனாட்சியே தவசத்தியின் வடிவே முடிவே அருள்க!
75. மீனாட்சியே ஏமசத்தியின் வடிவே முடிவே அருள்க!
76. மீனாட்சியே காமசத்தியின் வடிவே முடிவே அருள்க!
77. மீனாட்சியே சோமசத்தியின் வடிவே முடிவே அருள்க!
78. மீனாட்சியே வாமசத்தியின் வடிவே முடிவே அருள்க!
79. மீனாட்சியே பத்தர்சத்தியின் வடிவே முடிவே அருள்க!
80. மீனாட்சியே பத்தியார் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
81. மீனாட்சியே போத்தர் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
82. மீனாட்சியே போத்தியார்சத்தியின் வடிவே முடிவே அருள்க!



83. மீனாட்சியே புத்தர்சத்தியின் வடிவே முடிவே அருள்க!
84. மீனாட்சியே புத்தியார் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
85. மீனாட்சியே முத்தர் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
86. மீனாட்சியே முத்தியார் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
87. மீனாட்சியே சீவன்முத்தர் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
88. மீனாட்சியே சீவன்முத்தியார் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
89. மீனாட்சியே கருவாக்குச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!
90. மீனாட்சியே கருவாக்கியச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

91. மீனாட்சியே கருவாசகச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

92. மீனாட்சியே குருவாக்குச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

93. மீனாட்சியே குருவாக்கியச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

94. மீனாட்சியே குருவாசகச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

95. மீனாட்சியே தருவாக்குச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

96. மீனாட்சியே தருவாக்கியச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

97. மீனாட்சியே தருவாசகச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!



98. மீனாட்சியே திருவாக்குச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

99. மீனாட்சியே திருவாக்கியச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

100. மீனாட்சியே திருவாசகச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

101. மீனாட்சியே அருள்வாக்குச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

102. மீனாட்சியே அருள்வாக்கியச் சத்தியின் வடிவே முடிவே அருள்க!

103. மீனாட்சியே அருள்வாசக சத்தியின் வடிவே முடிவே அருள்க!

104. மீனாட்சியே மருள்வாக்குச் சத்தியின்
வடிவே முடிவே அருள்க!
105. மீனாட்சியே மருள்வாக்கியச் சத்தியின்
வடிவே முடிவே அருள்க!
106. மீனாட்சியே மருள் வாசகச் சத்தியின் வடிவே
முடிவே அருள்க!
107. மீனாட்சியே பனிமுடிய தென்னிமய வேந்தனின்
குலக்கொடியே அருள்க!
108. மீனாட்சியே தென்னிமய இந்துகங்கை பிறமமண்
யமுனை போன்று அருள்க!
109. மீனாட்சியே பஃறுளிக்கரைத்
தொன்மதுரை ஆண்டவளே அருள்க!
110. மீனாட்சியே குமரிக்கரைத் தென்மதுரை
ஆண்டவளே அருள்க!



111. மீனாட்சியே வைகைக்கரை மதுரை ஆள்பவளே அருள்க!
112. மீனாட்சியே பொருளுலக அருளுலக இருள்கள்
அகன்றிட அருள்க!
113. மீனாட்சியே சங்கத்தமிழால் சிங்கத்தமிழர்
ஒன்று திரண்டிட அருள்க!
114. மீனாட்சியே பதினெண்சித்தர்களின் இந்து மதத்தால்
தெய்வத்தமிழர் ஒற்றுமைப்பட அருள்க!
115. மீனாட்சியே அருளாட்சித் திருநகர்ச் செல்வியே
கருவறைகளுக்குப் புத்துயிர்ப்பு அருள்க!
116. மீனாட்சியே உகயுகமாக அருளாட்சி அமைந்திட அருள்க!
117. மீனாட்சியே அண்டர் பேரண்டர் அண்ட பேரண்டர்
அருளாட்சிக் குழைக்க அருள்க!
118. மீனாட்சியே அருட்கோட்டங்கள்
பாடிவீடுகளாகிட அருள்க!

119. மீனாட்சியே அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரரே
அருட்படையாகிட அருள்க!

120. மீனாட்சியே அருளாட்சிக்காக தமிழின மொழி
மத விடுதலை அருள்க!

121. மீனாட்சியே குருபாரம்பரிய வழி அருளாட்சி
அமைந்திட அருள்க!

122. மீனாட்சியே இலக்கிய பாரம்பரிய வழி அருளாட்சி
செயலாக்கிட அருள்க!

123. மீனாட்சியே அரசபாரம்பரிய வழி அருளாட்சி
வென்றிட அருள்க!

124. மீனாட்சியே உன்னாட்சியாகவே அருளாட்சி
அமைந்திட அருள்க!

125. மீனாட்சியே அனைத்திலும் ஆட்சி மீட்சி
விளைந்திட அருள்க!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்



## மீனாட்சி வணக்கம்

1. ஓம் இந்துவேதக் கனியே மீனாட்சியே
அருட்பயனே பேரின்பமே வணக்கம்

2. ஓம் இந்துமதச் செல்வமே மீனாட்சியே
நாதசித்தமே ஓதபோதமே வணக்கம்

3. ஓம் அருளாட்சிச் செல்வியே மீனாட்சியே
சாத்தரசாத்திரமே சாத்திறமே வணக்கம்

4. ஓம் ஞானக் கருவூலமே மீனாட்சியே
தோத்ததோத்திரமே தோத்திறமே வணக்கம்

5. ஓம் முத்தமிழ்ச் செல்வியே மீனாட்சியே
அமுதே அருளூற்றே வணக்கம்

6. இணக்கமாக நற்பேறுற
அருளும் திருவே மீனாட்சியே வணக்கம்
7. வணங்குகிறோம் காத்திடுக !
வணங்குகிறோம் காத்திடுக !
வணங்குகிறோம் காத்திடுக !

இந்து வேத நாயகம்





## *மீனாட்சி வாழ்த்து*

1. ஓம் ஆல்வாய் மதுரை மாமூதூர்த்
தெய்வமே மீனாட்சியே
திருவே தருவே கருவே குருவே வாழ்த்துகிறோம்
2. ஓம் முக்கூடல் மதுரைப் பழம்பதிக்
கடவுளே அங்கயற்கண்ணியே
அருவே அருவுருவே உருவருவே உருவே வாழ்த்துகிறோம்
3. ஓம் முத்தமிழ்ச் சங்க மாமதுரை
இறையே சொக்கியே
ஏமசோதியே காமசோதியே சோமசோதியே வாமசோதியே
வாழ்த்துக்கிறோம்
4. ஓம் அருள்விளை ஆலவாய்த் திருநகர்
எல்லாவே அங்கயற்கன்னியே
அருளாளர் அருளாளி அருளாடுநாயக உயிரே
வாழ்த்துகிறோம்

5. ஓம் மும்மதுரை கொண்ட தேவியே
அழகியே இயவுளே
மருளாளர் மருளாளி மருளாடு நாயக உய்வே
வாழ்த்துகிறோம்

6. யாவும் நலமாக்கிக் காத்தருள்க !
யாவும் நலமாக்கிக் காத்தருள்க !
யாவும் நலமாக்கிக் காத்தருள்க !

இந்து வேத நாயகம்



## *மீனாட்சி காயந்திரி மந்தரம்*

1. ஓம் மீனாட்சியம்! அங்கயற் கண்ணியம்!
அங்கயற்கன்னியம்! பயனாகுக
2. ஓம் சொக்கியம்! அங்கயற் கண்ணீசுவரம்!
அங்கயற்கன்னீசுவரம்! காவலாகுக
3. ஓம் ஆலவாய்! அழகியம்! சொக்கீசுவரம்!
சொக்கநாயகீசுவரம் சுவையாகுக!
4. ஓம் மீனாட்சியே ஓக யோக மோக போக
அருட்பெருஞ்சோதியாகும்!
5. இந்துவாகும் வேதமாகும் இந்துவேதமாகும்!
இந்துமதமாகும்!
6. ஓம் ஓம்! ஓம் ஓம்! ஓம் ஓம்! ஓம் ஓம்!

## மீனாட்சி காயந்திரி மந்திரம்

1. ஓம் ஆலவாய்த் திருநகர் அங்கயற்கண்ணித்திரம்
தாகவேகப்பசி தணிக்கும் செயலாகுக
2. ஓம் தென்னிமயன் மகள் சொக்கித்திரம்
பிண்டம் அண்டம் பேரண்டம் அண்ட பேரண்டம்
காக்கும் சத்தியாகுக
3. ஓம் பஃறுளித் தொன்மதுரை தெய்வ மீனாட்சித்திரம்
ஒகஓம யாகயக்ஞ வேள்வித் தவம் சித்தியாகுக
4. ஓம் தென்யமுனை பிறம்மபுத்திறத்தென்மதுரைத்தேவி
அழகித்திரம்
கொடிநிலை கந்தழி வள்ளி பத்தி முத்தியாகுக
5. இந்துவாகுக இந்துவேதமாகுக
இந்து வேதமதமாகுக இந்துமதமாகுக !
6. ஓம் ஓம் ! ஓம் ஓம் ! ஓம் ஓம் !
ஓம் ஓம் ! ஓம் ஓம் ! ஓம் ஓம் ! இந்து வேத நாயகம்




## மீனாட்சி காயந்திரி மந்திறம்

1. ஓம் தெய்வ வைகை மதுரை சொக்கழகித்திறம்
பத்தியாய் சத்தியாய் சித்தியாய் முத்தியாய்
சித்து விளையாடலாய் விளங்குக
2. ஓம் தெய்வ வைகை மதுரை மீனாட்சித்திறம்
நான்மறையாகி நான்முறையாகி நானெறியாகி
நான் வேதமாகி நலமெல்லாம் நல்குக
3. ஓம் தெய்வ வைகை மதுரை அங்கயற் கண்ணித்திறம்
நேமமாகி நியமமாகி நிடதமாகி நிட்டையாகி
நீதியாகி சோதியாகுக
4. ஓம் தெய்வ வைகை மதுரை அங்கயற்கன்னித்திறம்
ஆவியான்மா ஆருயிரினை சீவன்விளை விதிமதி
கடந்த பயனாகுக

5. ஓம் தெய்வ வைகை மதுரை அங்கயற்கண்ணிசுவரத்திறம்
இந்து வேதச் சுருதியாய் ஆரணமாய் ஆகமமாய்
மீமாம்சையாய் அருளளிடுத்திடுக

6. ஓம் தெய்வ வைகை மதுரை அங்கயற்கன்னீசுவரத்திறம்
ஞானக்கல்வியாய் பூசைவிதியாய் தத்துவமாய்
செயல் சித்தாந்தமாய்

இந்து மத வாழ்வாகிடுக





## *அருட்சினை மந்திறம்*

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி

ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்

கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு

வானாகி நின்றாயே உனைவாழ்த்தி வணங்குகிறேன்

ஏனோவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு

நானாகிய அடியேன் நலம் வேண்டுகிறேன்

தானாகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்

வீணாகி விலகியோடி ஒழியட்டும்

## கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம்

கற்பூரம் பாக்கு வெற்றிலை பழம் தேங்காய்
பக்குவமாய்ப் பண்ணிய பலகாரங்கள் பலவும்
படைத்தேன் ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
அனைத்தையும் காத்திடுக! காத்திடுக! காத்திடுக!
அருள் செழித்திடுக! செழித்திடுக! செழித்திடுக!
எங்கும் நலம் விளைக! நலம் விளைக! நலம் விளைக!
நான்மறையே! நான்முறையே! நாநெறியே! நான்வேதமே!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**



## இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

| | | |
|---|---|---|
| பிறப்பிடம் | : | இளமுறியாக் கண்டம் (The Lost Lemuria) எனும் கடலுள் மறைந்த " குமரிக் கண்டம் " |
| காலம் | : | பதினெண்சித்தர்களால் அனாதிக்காலத்தில் அதாவது கி.மு. 43, 73, 101 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. |
| மொழி | : | தமிழ்மொழி |
| வழிபாட்டு நிலையம் | : | 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள் |
| இந்துமத நூல்கள் | : | 108 பூசை மொழிகள், 48 மூல நூல்கள் |
| இந்துமதப் பயன்கள் | : | தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவமைப்படுத்தி வளமான வாழ்வு பெறச்செய்தல். |